மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்
இல.. ..ப் பெற்றது,
27 DEC 1996
உரிய நடவடிக்கைக்காக

செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

பக்கங்கள் 8

# உதயதாரகை

கிறிஸ்மஸ், புத்தாண்டு சிறப்பு மலர்

மலர்: 157 ஆரம்பம்: 1841 வெள்ளிக்கிழமை 25 - 12 - 1996 இதழ்: 16

செய்திகள், கட்டுரைகள், கவிதைகள்
அனுப்பப்பட வேண்டிய முகவரி:
ஆசிரியர்
உதயதாரகை
ஆதீனக் காரியாலயம்
வட்டுக்கோட்டை.

## இன்று ஆண்டவராகிய மேசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்!

கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின நத்தார் சிறப்பு வழிபாடு, வட்டுக்கோட்டை பேராலயத்தில் 20-12-1996 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் அருள்மிகு. அறிவர். டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் கலந்துகொண்டு மறையுரையை வழங்கினார்.

அவர் பேசும்பொழுது. ''தொடர்ச்சியாக அன்னிய ஏகாதிபத்தியங்களின் கீழ் அடிமைப்பட்டு வாழ்ந்த



யூதஇனம், கடவுளே தமக்கு விடுதலையையும், தாயகத்தையும் தருவார் என நம்பியிருந்தனர். இந்த வேளையில் பாலனின் பிறப்பை குறிப்பிட 'இன்று ஆண்டவராகிய மேசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின்ஊரில் பிறந்திருக்கிறார்' (லூக் 2:11) என்ற செய்தி நற்செய்தியாக அறிவிக்கப்படுகிறது. இதில் 'இன்று' என்ற சொல் மிக அழுத்தமுடையது இனிமேல் எதிர்காலத்தில் நடக்கப்போகும் ஒன்றைப்பற்றியதல்ல, இன்றே மீட்பின் செயல் ஆரம்பித்துவிட்டது.

சகேயுவின் வீட்டில் பிரவேசித்த இயேசு இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று என்றார். (லூக்:19-9) இறுதியில் சிலுவையில் தன்னை நோக்கிய கள்வனிடம் 'இன்று நீ என்னோடு கூட பரதீசிலிருப்பாய்' என்கிறார். (லூக் 23:43) லூக்கா நற்செய்தியாளன் இவ்வாறு இன்று என்பதை அழுத்திக் காண்பிக்கிறார்.

'இன்று இரட்சகர் பிறக்கின்றார் இது இருளாக இருக்கின்றது: இருளின் நடுவில் அவர் பிறக்கும்போது அது பகலாக மாறுகின்றது' இன்றைய நத்தார் நாளும் இருள் நிறைந்த சூழலாகவே நம் மத்தியில் காணப்பட்டாலும், இயேசுவின் பிறப்பினால் இவ்விருள் நீங்கும், ஒளி பிறக்கும்'' என்று கூறினார்.



### வாசகர்களுக்கு உளங்கனிந்த நல் வாழ்த்து!

உதயதாரகை வாசக அன்பர்களுக்கு மற்றும் அனைவருக்கும். எங்கள் உள்ளங் கனிந்த கிறிஸ்மஸ், புதுவருட பண்டிகை வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நீங்கள் இரட்சிப்பின் ஊற்றுகளிலிந்து
மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டு கொள்வீர்கள்
ஏசா. 12:3

உதயதாரகை ஆசிரியர் குழுவும்,
அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சகமுகாமையாளரும்
ஊழியர்களும்

## மாண்டு போன மனித நேயம்

வன்னியிலும் பிற இடங்களிலும் வாழும் தம் சொந்தங்களின் சொத்துக்களை இங்கு வதியும் சொந்தங்கள் பாதுகாக்க வேண்டிய கடமைப்பாடு உள்ளவர்கள்–அதனால் திருத்த வேண்டியவற்றை திருத்தி பூட்டுப் போட்டு, வேலி அடைத்து பாதுகாக்கின்றனர் அவர்களின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு விட்டு ஓடுகள், நிலைகள் திருடப் படுகின்றன. (ஏலவே வீட்டுப் பொருட்கள் திருடப்பட்டு விட்டன)

சமீபத்தித்தில் அராலி பகுதியில் இராணுவ சுற்றிவளைப்பு ஒன்று நடைபெற்றது, பூட்டப்பட்ட வீடுகள் திறக்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டன. ஊரிலுள்ள யுவதிகள், இளைஞர்கள் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டனர். இதன் காரணமாக பெற்றோரும் அவர்கள் பின்னே சென்றனர். இவ்வமையம் இராணுவத்தினரால் திறக்கப்பட்ட வீடுகளிலிருந்து பெறுமதி வாய்ந்த பெருந்தொகையான பொருட்கள் அவ்வூர் சிலரால் (கள்வரால்) எடுத்துச் செல்லப்பட்டன. இதனைக் கண்ட பொதுமக்கள் அவர்களிடம் ஏதும் தட்டிக் கேட்க முடியாதவாறு அவர்கள் ''பெரும் வீரம்'' மிகுந்தவர்கள்.

இதனை என்னவென்பது? தமிழர்களின் மனித நேயம் மாண்டு விட்டதா? பிறர் சொத்தில் சுகம் காணும் ஈனர் கூட்டம் என்றுதான் திருந்துமோ? இறைவன் தான் இவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

## அவதாரம் எடுத்த இறைவன் இன்றும் மனிதனாகவே நம்முடன் வாழ்கிறார்!

வடமாகண வை எம். சி. ஏ கள் இணைந்து நாடாத்திய கிறிஸ்து பிறப்பு இன்னிசை வழிபாட்டில் அருள்திரு. V. இராஜ்குமார் அருளுரையாற்றினார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

கடவுளுடைய வார்த்தை ஒரு சிறு குழந்தையாகி மாட்டுக் கொட்டிலில் பிறந்தது. வார்த்தையானவர் மாம்சமானார், கடவுள் மனுஷவுருவானார். அல்லது ஊனுடல் வடிவம் எடுத்தார் என்பதே கிறிஸ்மஸின் மையசெய்தி. ஆண்டவர் இயேசுவை கிறிஸ்துவாக, மீட்பராக விளங்கும் புதிய ஏற்பாடு இவரைக் கடவுளின் ஊனுடல் வடிவம் என்றும் விளங்குகிறது.

உலக வரலாற்றில் கடவுள், வரலாற்றில் செயல்படுகிற இறைவன், வரலாற்றை இயக்கும் இறைவன் என இயல்பூக்க இறையியல் மூலமாக விளக்கப்பட்டார். பழைய ஏற்பாட்டில் இருக்கிறவராகவே இருக்கிறேன் என எபிரேய பின்னணியில் விளக்கப்பட்டார். புதிய ஏற்பாட்டிலே இக் கடவுள் ஊன் நிலையில் வெளிப்பட்டார் என விளக்கப்படுகிறார்.

கடவுள் இறங்கி வந்தார்; தன் நிலையிலிருந்து வேறொரு நிலைக்கு வந்தார் என்பது, இறைமையின் உயர் நிலையையும், அதேயிடத்து மனிதனின் தாழ்ந்த நிலையையும் எடுத்துக் காட்டுகிறது தன்னைததானே தாழ்த்தினார் என்பதில் இந்த உண்மை காணக்கிடக்கிறது. அதாவது இந்த மனுஉருவேற்பில் இறைமை முழு வெளிப்பாடடைந்து, கடவுள் தம்மை முழுமையாக வெளிப்படுத்தி மனிதர் மத்தியிலே ஊனுடல் எடுத்தார்.

20ம் நூற்றாண்டு பல பெரும் இறையியலாளரைக் கண்ட நூற்றாண்டு. உலகில் ஏற்பட்டு வரும் பற் பல மாற்றங்களின் ஊடே மாறாத இயேசுவைக் கூறி அளிப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
இலங்கை

மாணவர் பகுதி கிறிஸ்தவம் A/L

# ஒத்தமை நற்செய்தி நூல்கள் 3



நற்செய்தி என்பது இயேசு உலகிற்கு கொண்டு வந்த நல்ல செய்தியை குறிப்பதுடன், அவரே அச்செய்தியுமாவார். நற்செய்தி என்பது கிரேக்கத்தில் 'euangelion' எனப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் இச்சொல் 'மீட்பின் செய்தி' எனும் விசேட கருத்துப்பெறுகிறது. இது கிறிஸ்துவின் வாழ்வு, போதனை, மீட்பின் செயல் இவற்றை குறிக்கிறது. கிரேக்கர்கள், தம் கதாநாயகர்களது வாழ்வின் நினைவுகளை மீள நோக்கவும், திறமைகளை காண்பிக்கவுமே சரிதைகள் எழுதப்பட்டன. இவைகளில் அதிகமாக மிகைப்படுத்தி அவர்களை புகழ்வதுமுண்டு. ஆனால் மாற்கு, மத்தேயு லூக்கா எனும் நற்செய்தி நூல்கள் தொகுக்கப்பட்டமை, இயேசுவை பற்றி மீள தொகுத்து கூறவோ, அல்லது அவரது வல்ல செயல்களுக்கான புகழ் மாலையோ அல்ல. திருச்சபையில் இணைவோரின் விசுவாசத்தை எழுப்பி விடவும், அதனை உறுதிப்படுத்தவுமே இவை எழுதப்பட்டது ஆதி கிறிஸ்தவ சபைக்கு அதன் விசுவாச அடித்தளத்தை காண்பிக்கவும், மேலும் பிரசங்கிக்கும், அறிவுறுத்தும், விவாதிக்கும் திருச்சபையின் பணிக்கு உறுதியான உதவியை வழங்கவுமே, இயேசுவின் வார்த்தைகளும் செயல்களும் ஒன்றாக தொகுப்பட்டன. கிறிஸ்தவ குழுமங்கள் பயன்படுத்தவும், வழிபாடுகளில் வாசிக்கவும் புத்தகங்களாக நற்செய்திகள் உருவெடுத்தன.

அடுத்த பகுதியில், நற்செய்தி நூல்கள் உருவாவதற்கான ஆதாரங்கள் எவையென லூக்காவின் முன்னுரையிலிருந்து (1:1-4) நோக்குவோம்.

இயேசுவின் அப்போஸ்தலர்களின் போதனைகளே பலவிதமாக எழுத்து வடிவம் பெற்றன. அப்போஸ்தலர்களின் போதனையை (Kerygma) பலர் எழுதத் தொடங்கினர். நற்செய்தி நூல்கள் உருவாகுமுன்னமேயே கிறிஸ்துவை பற்றிய எழுத்தாவணங்கள் இருந்தன. பல வாய்மொழி பாரம்பரிய கதைகள் உலவி வந்தன. நற்செய்தி நூல்களை எழுதியவர்கள் தமக்கென தனித்துவ இறையியல் சிந்தனையுடையவர்களாயிருந்தாலும், இயேசு பற்றிய பழையபாரம்பரிய செய்திகளை சேகரித்தும், தொகுத்தும், திருச்சபையின் நிலைமைக்கேற்ப விளக்கம் அளித்தனர்.

நற்செய்தி நூல்களினுள், லூக்கா ஒருவரே தனது நூலை முன்னுரையுடன் ஆரம்பிக்கிறார். (1;1-4) அக்காலத்தைய இலக்கிய வழமையின்படி, தனது நூலுக்கான மூலங்களையும், முன்னோடிகளையும் தன் படைப்பிற்கான அடிப்படை காரணங்களையும், யாருக்கு எழுதுகின்றேன் என்பதையும் கூறுகிறார். இதில், நற்செய்தி நூல்களின் உருவாக்கத்திற்கு உதவியன பற்றிய படிப்பே A/L மாணவர்களுக்கு அவசியமாகும். அவற்றினை நோக்குவோம்.

1. நேரில் கண்ட (கண் கண்ட) சாட்சிகள்:- இது சாதாரணமாக, இயேசுவோடு வாழ்ந்த அப்போஸ்தலர்களை குறிக்கிறது; மேலும், திருத்தொண்டர், பிலிப்பு (அப்போஸ்தலர் பணி 8:5; 21;8) சிமியோன் நீகர் (அப் 1:13) மனாயீன் (அப் 13:1) போன்றவர்களது போதனைகயையும். இவ்வேளையில் லூக்கா சிந்தையில் கொண்டிருக்கலாம்

2. இறை வார்த்தையை அறிவித்து வந்த ஊழியர்:- மிகக் கடுமையாக நின்று, கண் கண்ட சாட்சிகளினுடையதை மட்டும் பதிவு செய்யாமல், சாட்சிகளின் வார்த்தைகளால் எழுப்பப்பட்டு வந்த சபைகளில் நிலவிய பிரபல்யமான கதைகளையும் ஜெபங்களையும், அறிவுறுத்தல்களையும் லூக்கா எழுதுகிறார்.

மேற்கூறப்பட்ட இரண்டு ஆதாரங்களும், எழுத்தாவணங்களா அல்லது வாய்மொழி பாரம்பரியங்களா என்பதை லூக்கா குறிப்பிடவில்லை. அநேகமாக வாய்மொழி பாரம்பரியங்ககளாவே இருக்கலாம். சிலர், கண் கண்ட சாட்சிகளையும், இறைவார்த்தை ஊழியர்களையும் வேறு வேறாக நோக்கத்தே வையில்லை. ஆதிமுதல் கண் கண்ட சாட்சிகளே, இறைவார்த்தை ஊழியர்களுமாயிருந்தனர் (லூக்கா 9:1-6) என்றும் வாதிடுவர்.

3. முறைப்படுத்தி எழுத முயன்ற பலர்:- லூக்காவிற்கு முன்னமே பலர் இயேசுவின் நிகழ்ச்சிகளை எழுதியுள்ளனர். இவர்கள் கண் கண்ட சாட்சிகளல்ல. பெற்றுக்கொண்டவர்களே. இவர்களுக்குள்ளே தானும் ஒருவனாக காண்கிறார் லூக்கா, அவர்களுடைய எழுத்தாவணங்களையும் லூக்கா பயன்படுத்தியிருக்கலாம்.

★ தொடக்கத்திலிருந்து கருத்தாய் ஆராய்ந்து, ஒழுங்கு படுத்தி எழுதுபவர் லூக்கா (1:3,4):- மேற்கூறப்பட்ட வாய்மொழி பாரம்பரியங்களையும், எழுத்தாவணங்களையும் திட்டமாய் ஆராய்ந்து எழுதுகிறார். இதற்கு மூன் எழுதியவர்களை குற்றப்படுத்தாமல், இந்நிகழ்ச்சிகள் உண்மையானவை என்று கண்டுகொள்ளத்தக்கதாக ஒழுங்கு படுத்தி எழுதுவதாக லூக்கா கூறுகிறார். நற்செய்தி நூல்களின் உருவாக்கம் குறித்து அறிய லூக்கா 1:1-4 மட்டுமே அகச்சான்றாக காணப்படுகிறது. மேலும், தனது ஒழுங்கமைப்பின் வரலாற்று நேர்மையை பேணுவதில் அதிக சிரத்தை எடுக்கிறார் லூக்கா. (தொடரும்)

எம். எஸ். யூட்

சகோதரிகளுக்கு:

# நல்ல பங்கு!!

அடடா இது மார்கழி மாதமா? நான் மறந்தே போய் விட்டேன். இப்போதிருந்தே நத்தாருக்குரிய ஆயத்தங்களை செய்தால் தான் இருபத்தி நாலாம் திகதியாவது வேலை ஒய்வுறும் என்றாள் ஒரு பெண். ஐயையோ! அக்கா என்ன சொன்னீர்கள் மார்கழி மாதமா? இனிஎன்பாடு திண்டாட்டம் தான். இடுப்பொடிய வேலை. ஓய்வே கிடையாது. என்று அலுத்துக் கொண்டாள் மற்றப் பெண் அவர்கள் சம்பாஷனை இது மார்கழி மாதம் என்ற நினைப்பினை எனகு மூட்டியது. அந்த இரு பெண்களையும் போன்று நாமும் நத்தார் மாதத்தில் என்ன விதமாக வீட்டை அலங்கரிப்பது? பிள்ளைகளிற்கு என்ன விதமாக உடையணிவிப்பது? எந்த ருசீகரமான விதமாக விருந்து வைத்தால் இனத்தவர்கள் என்னை புகழுவார்கள் என்று இப்போதிருந்தே சிந்திக்க தொடங்கி இருப்போம். அல்லவா சகோதரிகளே இவை உலகப் பிரகாரமாக அத்தியாவசியம் தான். ஆனால் எம் ஆண்டவர் இயேசு என்ன சொல்லுகிறார் என்று சற்று சிந்திப்போம். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் (உலகப் பிரகாரமான காரியங்களெல்லாம்) உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும். 6:33

ஆம் சகோதரிகளே! நாம் இவை எல்லாவற்றிற்கும் மேலாக தேட வேண்டியது ஒன்றுண்டல்லவா? இந்த நத்தார் காலத்தில் வேதாகமத்திலுள்ள ஒரு கதையை சற்று சிந்திப்போம் பெத்தானியா எனனும் ஊரிலே மார்த்தாள், மரியாள் என்று இரு சகோதரிகள் இருந்தார்கள்; இவர்களுக்கு லாசரு என்று ஒரு சகோதரனும் இருந்தான். எமது ஆண்டவர் பெத்தானியாவிற்கு வரும் போது இவர்கள் வீட்டிற்கு போவது வழக்கம். மாத்தாலோ எம்மைப் போன்று எந்த நேரமும் சமயலறையில் பற்பல வேலைகள் செய்வதிலும் உணவு தயாரிப்பதிலும் தன் நேரத்தை செலவிடுவது வழக்கம். ஆனால் மரியாளோ ஆண்டவர் பாதத்தில் அமர்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருப்பாள். உலக வேலைகளை முக்கியமாக கருதும் மாத்தாள் ஆண்டவரிடம் ஒடி வந்து தன் சகோதரியைப் பற்றி முறையிடுகிறாள். ஆண்டவர் அவளுக்கு அளித்த பதில் என்ன? நீ அநேகம் காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய்? தேவையானது ஒன்றே மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள் என்றார். (லூக்கா 10:41—42)

இதை விசுவாசிக்கும் சகோதரிகளே எம் ஆண்டவர் எம்மைப் பார்த்து கூறும் நத்தார் நற்செய்தியும் இதுவே. மாத்தாளுக்கு கூறிய அதே பதிலை இந்த மாதத்தில் எம் ஒவ்வொருவரையும் பார்த்து கூறுகிறார். நாம் எம் குடும்பத்தை எம் இனத்தவரை எவ்வாறு மகிழ்விப்பது என்று சிந்தித்து சிந்தித்து களைத்துப் போயும் விடுவோம். ஆண்டவராகிய இயேசுவை மகிழ்விப்பது எவ்வாறு என்று கவலைப் பட்டோமா? சற்று எம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்: உலகப் பிரகாரமான காரியங்களில் வருடா வருடம் முன்னேறுகிறோம். ஆத்மீகப் பிரகாரமாக முன்னேறியுள்ளோமா? அல்லது ஒருபடி இறங்கிவிட்டோமா? மரியாளைப் போன்று அவர் பாதத்தில் காத்திருந்து அவர் எமக்கு கொடுக்கும் நற்செய்தியை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டோமானால் உலகப் பிரகாரமான எமது முயற்சிகளினாலும் தேவ ஆசீர்வாதம் கூடக் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. நத்தார் வருடா வருடம் வருகிறது இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் பிறந்த இயேசு பாலகனாகவே எம் உள்ளத்தில் வீற்றிருக்கிறாரா? அல்லது உயிர்த்தெழுந்து ஜீவனுள்ள ராஜாதி ராஜனாக அரசாட்சி செய்கிறாரா? எம்மை ஆராய்ந்து பார்ப்போம்.

உலக வேலைகளை கிந்துத்து தொடங்கு முன்னர் எம் உள்ளத்தை ஆராய்ந்து எம் ஆண்டவர் வரத் தடையான யாவற்றையும் நீக்கிவிட்டு மாசற்றவராய் புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடையமகிமைக்கென்றுசெய்யுங்கள். (1 கொரி 10:31) என்று பரி. பவுல் கூறியதைப் போன்று செய்தோமானால் நிச்சயமாக எம் ஒவ்வொருவருக்கும் இந்த நத்தார் பண்டிகை ஆசீர்வாதமான, மகிழ்ச்சிகரமான பண்டிகையாகும். மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள் ஆம் சகோதரிகளே நாமும் பண்டிகை தினத்தில் நல்ல பங்கை தெரிந்து கொள்ள முன் வருவோமாக இந்த நத்தார் பண்டிகை உங்களுக்கும் எனக்கும் ஆசிர்வாதமான பண்டிகையாய் இருக்க எமக்காக தாழ்மையின் ரூபமாக மாட்டுக் கொட்டிலில் பிறந்த இயேசு பாலகன் அருள்புரிவாராக.

சகோதரி
லலிதா நவரத்தினம்
வரணி

சகோதரிகளுக்கு எனது நத்தார் வாழ்த்துக்கள்.

# விடியலை நோக்கி ஏங்கி நிற்கும் மக்களின் வாழ்வை நிறைவாழ்வாக்குவாராக

பெத்தலையில் பிறந்த எம் இயேசுகிறிஸ்துவின் பிறப்பை நினைவு கூரும் இந் நத்தார் பண்டிகையின் பொழுது துன்பங்கள் பல அனுபவித்து நிற்கும் மக்களை நினைவு கூருவோமாக!

சென்றவருட இறுதிப்பகுதியில் பல இலட்சக்கணக்கான மக்கள் சொல்லொணாத் துன்பங்களின் மத்தியில் இடம்பெயர்ந்தனர். அத்துன்பங்களின் மத்தியில் இவ்வருடம் ஒரு குறிப்பிட்ட தொகை மக்கள் மீண்டும் தமது இல்லங்களுக்கு திருப்பிவிட்டனர், குடா நாட்டு மக்களில் மேலும் மக்கள் வன்னியில், இந்த பழைகாலத்தில் இயேசுவின் காலத்தில் சத்திரங்களில் இடம் கிடைக்காமல் பெத்தலேகமில் மாட்டுத் தொழுவத்தில் இடம் கிடைக்காமல் இயேசு தவிப்பது போல் பெருந்தொகையான தமிழ் மக்கள், மாட்டுத் தொட்டிலில் தானும கிடைக்காமல் அவதிப்படுகின்றனர், இந்நிலையில் தான் மீண்டும் கிறிஸ்துவின பிறப்பை நினைவு கூருகின்றோம. இயேசுவின் பிறப்பு எமக்கு தென்பும் ஆறுதலும் தருகின்றது.

அமைதியின் அண்ணலாகிய இயேசு இவ் இனிய நத்தார் காலத்தில் அவதியுறும் மக்களனைவரினதும் ஆசைகளைப் பூர்த்தி செய்வாராக. சொல்லொணா துன்பங்களோடு விடியலை நோக்கி ஏங்கி நிற்கும் மக்கள் அனைவருக்கும் இயேசு நிறைவாழ்வளித்திடுவாராக.

சி. ஜே. ஜெயரட்ணம்
பொருளாளர்
யாழ். தென்னிந்திய திருச்சபை

# பயப்படாதிருங்கள் பெரிய சந்தோஷத்தின் நற்செய்தி உங்களுக்காக காத்திருக்கிறது

அன்று இயேசு பாலகனாக அவதரித்த செய்தி கேட்ட யாவரும், உடனடியாக சமாதானத்தை அடையவில்லை. ஏன்? தேவதூதனால் மரியாளுக்கும், மேய்ப்பர்களுக்கும் அறிவிக்கப்பட்ட வேளையில் கூட, அவர்கள் சிந்தித்தார்கள்; சமாதானப் பிரபுவை ஏற்கத் தயங்கினார்கள்; கலங்கினார்கள். அந்த நேரத்திலே தான், பயப்படாதீர்கள்; கலங்காதீர்கள்; என்ற நம்பிக்கையூட்டும் நற்செய்தி கொடுக்கப்பட்டது.

இன்று நாம், வீடு உடைமைகள் இழந்தும்; எப்போது எமது இடத்துக்குச் செல்லலாம்? எப்போது சமாதானம் வரும்? என்ற ஏக்கத்தோடும், ஆவலோடும் காத்திருக்கும் மக்களாக நாம் கிறிஸ்து பிறப்பைச் சந்திக்கும்போது, எமக்கு ஆறுதலும் உறுதுணையுமாக இருக்கும் வாசகம் 'பயப்படாதிருங்கள்; திடமனதாயிருங்கள் உங்களைப் படைத்த கர்த்தர் உங்களோடு இருக்கின்றார். ஒருபோதும் உங்களைக் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கை தவிர்ந்து வேறு ஒன்றும் இருக்க முடியாது. எமது துன்பத்தைச் சந்திக்கும் இயேசு பாலகன் ஒரு புதிய சமாதானத்தைக் கட்டளையிட்டருள்வாராக.

இந்த கிறிஸ்மஸ் காலம் எமக்கு சமாதானத்தைக் கொண்டு வரும் காலமாகவும், எமக்குள் சகோதரத்துவத்தையும் ஒருமைப்பாட்டையும் வளர்க்க அழைக்கப்பட்டோம் என்ற உத்தரவாதத்தை உணர்த்தும் காலமாகவும் அமையட்டும்.

அனைத்து மக்களுக்கும் கிறிஸ்மஸ் புதுவருட நல்லாசிகள் கிட்ட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நோயல் அ விமலேந்திரன்
செயலாளர்
யாழ். அத்தியட்சாதீனம், தென்னிந்திய திருச்சபை
பதில் துணை அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி

## பகல் பராமரிப்பு நிலையம் அச்சுவேலி

நான்கு வருட இடைவெளிக்குப் பின்பு அச்சுவேலி பகல் பராமரிப்பு நிலையம் 17-07-1996 அன்று ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது இவ் நிலையத்தின் செலவுகள் யாவற்றையும் ஆதீனமே பொறுப்பெடுத்து நடத்துகின்றது. K. N. H.ன் பதிவுக்கான விண்ணப்பங்களும் அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான சகல உதவிகளையும், ஆலோசனைகளையும் ஆதீன திட்டப் பணிப்பாளரே மிகவும் உற்சாகத்தோடு வழங்கிவருகின்றார். இங்கு தற்போது இருபத்தைந்து மாணவ மாணவிகள் பயில்கின்றனர். அரை நேரமாக இப்பாடசாலை நடைபெறுகின்றது. நிரந்தர நியமனம் பெறாத இரு ஆசிரியைகளே பிள்ளைகளுக்கு கல்வி புகட்டுகின்றார்கள்.

இம் மாதம் 20ம் திகதி காலை 10.00 மணியளவில் (பழையநேரம்) இவ் நிலையத்தின் பிள்ளைகளினால் ஒளி விழா நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

K. I. K.

# நத்தார் நன்னாளும் - அதன் அடையாளங்களும்



நத்தார் தரு எப்போது தொடங்கியது என எப்போதாவது நீங்கள் வியந்தது உண்டா? கர்ண பரம்பரை கதைகளின்படி மாட்டின் லூதர்தான் முதலாவது நத்தார் தருவை ஆரம்பித்து வைத்ததாக நம்பப்படுகின்றது

நத்தார் தினத்தை ஒட்டிய நாட்களில் ஜெர்மன் நாட்டின் ஊடாக அவர் பயணம் செய்த வேளையில் எவக்கிறீன (தினமும் பச்சையாக உள்ள மரம்) இடையாக வானத்தை பார்த்தார். வானத்து நட்சத்திரங்கள கண்சிமிட்டிக் கொண்டிருக்கக் கண்டு வீடு வந்ததும் அவற்றை நினைவு கூர்ந்தார். சவுக்குமரம் மீது மெழுகுதிரிகளை வைத்ததன் மூலம்.

நத்தார் வாழ்த்து அட்டைகள் பழைய நட்புகளுக்கு புத்துயிர் ஊட்டியும் புதிய நட்புக்கு அத்திவாரம் இட்டும் வருவதற்கும் துணைபுரிகின்றது. இதன் ஊடாக பாலனின் பிறப்பு நினைவு கூறப்படுகின்றது

நத்தார் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் வழக்கம் சுமார் 140 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்தது. 1946 ஆம் ஆண்டு ஹென்றி கோல் ஆடம்பர வண்ணப்படங்களில் பிரசுரிக்கப்பட்ட வாழ்த்து அட்டைகளை அனுப்பினார். இதில் குதூகலமான நத்தார் சந்தோசமான புதுவருட வாழ்த்துக்கள் என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டு இருந்தன.

### சிவப்பு றொபின் குருவி

நத்தார் வாழ்த்து மடல்களிலும் அலங்காரங்களிலும் மிகவும் முக்கியமான இடத்தைப் பிடித்திருப்பது சிவப்பு றொபின் குருவி 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இக் குருவி நத்தாருடன் இணைந்து கொண்டது.

### மெழுகு வர்த்திகள்

அமைதி நிறைந்த இரவிலே மின்னி எரியும் நத்தார் மெழுகு வர்த்திகள் அதிக அர்த்த புஷ்டியுள்ளவை எனலாம். சமாதானத்தை எடுத்து விளக்குவதுடன் உலக கவலைகளை ஒதுக்கி ஓரமாக வைத்திட நமக்கு உறுதுணையாக உள்ளன. பழைய நினைவுகளென்ற பாதைகளில் இஷ்டம்போல உலாவிவர அவை மனதுக்கு உதவுகின்றன. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றை வழிபட்ட மூதாதையரின் பழக்கத்தில் இருந்து தோன்றியவை கிறிஸ்மஸ் மெழுகு வர்த்திகள். ஒளி என்பது அவர்களுக்கு வாழ்க்கை விசுவாசம் விவேகம் என்பனவாகத் தோன்றியது அத்துடன் கடவுளின் கொடியாகவும் அது கருதப்பட்டது. நத்தார் குதூகலத்தின் வெளிப்பாடாக மெழுகுவர்த்திகள் தேவாலயங்களில் ஏற்றப்பட்டன என்று பரி ஜெறோம் கூறுகிறார்


### கறோல் பாடல்கள்

மத்தியகிழக்கு நாடுகளில் சிலவற்றில் தொட்டிலை சுற்றி பெண்கள் நடனமாடிப் பாடும் வழக்கம் நிலவுகிறது நத்தார் கீதங்கள் அனைத்துமே மகிழ்ச்சிப் பெருக்கை மனதுக்கு இனிய இசை மூலம் வெளிப்படுத்துவனவாகும். இந்தியாவில் மனோரம்மியமான தாலாட்டுப் பாடல் பாணியில் நத்தார்க் கீதங்கள் அமைக்கப்படுவது வழக்கம் தென்னிந்தியாவில் உள்ள தேவாலயங்கள் பலவற்றில் பாடப்படும் நத்தார்க் கீதங்களில் பெரும்பாலானவை நெஞ்சைச் சுற்றிக் கொள்ளும் நீலாம்பரீராகத்தில் அமைந்தனவாகும்.

வி. நேசன்
யாழ். தொழில் நுட்பக்கல்லூரி,
வட்டுக்கோட்டை.

# சமாதானப் பிரபு வருகிறார்!

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற ஓர் வரலாற்று உண்மைச் சம்பவத்தினை இன்றும் நாம் குதூகலத்துடன் கொண்டாடுகின்றோம்.



ஆம் ஆண்டவராகிய கிறிஸ்து எனும் இரட்சகர் ஏரோது ராஜாவின் நாட்களிலே, சீரியா நாட்டிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாகவிருந்தபோது தாவீதின் ஊராகிய யூதேயா நாட்டிலுள்ள பெத்தலகேம் எனும் ஊரிலே பிறந்தார். ஆண்டவருடைய பிறப்பு மேய்ப்பர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது ஆனால் ஏரோதுவிற்கோ கலக்கத்தைக் கொடுத்தது. ஆண்டவருடைய பிறப்பு யூதர்களுக்கு ஓர் நம்பிக்கை நட்சத்திரமாகியது. ஆம் தமக்கு ஓர் மேசியா பிறப்பார் அவர் தம்மை எல்லாவித தளைகளினின்றும் விடுவிப்பார் என்ற எதிர் பார்க்கைக்கு ஓர் விடிவெள்ளியாக குழந்தை இயேசுவின் பிறப்பு எண்ணப்பட்டது ஆனால் ஆண்டவரோ சமாதானப் பிரபுவாக பிறந்தார். அவருடைய பிறப்பு உன்னததிலிருக்கிற தேவனுக்கு மகிமையையும், பூமியிலே சமாதானத்தையும், மனு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தேசமே பயப்படாதே! மகிழ்ந்து களிகூறு! கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்யக் காத்திருக்கிறார்

இன்று நம் நாட்டில் யுத்தம் போன்ற அச்சுறுத்தல்கள் தலை தூக்கிக் கொண்டிருக்கும் வேளையில் தேசமே பயப்படாதே என்று யோவேல் தீர்க்கன் சொல்லுகிறார் இறையாட்சியில் பயம் ஒழிக்கப்படுகிறது. இயேசு கிறீஸ்துவின் அன்பு மனிதரை மாற்றவல்லது. நம் நாட்டில் இன்று வறுமை, சமாதானமின்மை, துன்பம், துயரம் மக்களை ஒரு புறம் வாட்டுகிறது. ஆயினும் தேசமே மகிழ்ந்து களிகூரு என்று யோவேல் தீர்க்கன் கூறுகிறார்.

எங்கும் சமாதான பகிர்வும், மாயமற்ற அன்பும், மற்றவர்கள் மீது காட்டும் கரிசனையும் வளரும் போது துன்பமோ, வறுமையோ நாட்டை ஆட்கொள்வதில்லை. இன்று பெரிய காரியங்கள் நாட்டில் எதிர்பார்க்கப் படுகின்றன. கர்த்தர் நம்மைக்கொண்டு பெரிய காரியங்களைச் செய்வார் என்று யோவேல் கூறுகின்றார். அதற்காக இந்த உலகத்துக்கு வெற்றியுள்ள ராஜாவாக ஆட்சி செய்ய இயேசு கிறிஸ்து வருகிறார். அவர் வருகைக்காக நாம் வழியை ஆயத்தப்படுத்த வேண்டுமென்பதே அவர் செய்தி. வழியை எப்படி நாம் ஆயத்தம் செய்வது?.

இயேசு பிரான் நம் உள்ளத்தில் பிறக்க, வாழ்வில் இடம்பெற, வழியை ஆயத்தம் பண்ண அழைக்கப்படுகிறோம். பொதுவாக விசுவாசமாகிய இறைபற்றை நாம் சொல்லளவில், ஆலயவழிபாட்டளவில் நிறுத்திக் கொண்டிருக்கிறோம். உணர்ச்சிவசப்பட்டு ஜெபிப்பதிலும், பாடுவதிலும், பிரசங்கங்களைக் கேட்பதிலும், பிறருக்குப் பிரசங்கிப்பதிலும் மட்டுமே நம்மில் அநேகர் பக்தியைக் கண்டு கொள்கிறோம். ஆனால் ஏசாயாதீர்க்கன் உண்மையான பக்தி, உபவாசத்தைப் பற்றிக் கூறிய வார்த்தைகளை நினைவில் கொள்வோம். (ஏசாயா 58:6-7)

வாழ்க்கையோடு தொடர்பற்ற எச்செயலும் தகுதியான பக்தியாகாது நம்முடைய வழிபாடு, ஜெபங்கள், அருளுரைகள் யாவும் இறைவன் மனுமக்கள் வாழ்க்கையைக் குறித்துக்கொண்ட இரட்சிப்பின் நோக்கத்தின் வெளிப்பாடாக அமைய வேண்டும். உன் மக்கள் மேல் காட்டப்படாத அன்பு உண்மையான இறையன்பு அல்ல என்கிறது திருமறையில் (1யோ 4:20,21 (மத் 5 23.24) காணக் கூடியதாக இருக்கிறது. அவர் அன்பு ஏழைகள், பசியுற்றோர், சிறைப்பட்டவர்கள், சீரழிந்தவர்கள், ஒடுக்கப்பட்டோர், திக்கற்றோர் மேல் ஆறாகப் பாய்கிறது. அவருடைய வருகை அவரின் பிறப்பின்மூலம் எல்லோரும் [illegible]ன் புற்றிருக்கும் ஒரு சமநிலை வாழ்வு உருவாக ஆண்டவர் கிருபை செய்வாராக.

உங்கள் அனைவருக்கும் எங்கள் நத்தார் நவவருட நல் வாழ்த்துக்கள்!

அருள்திரு. பொ. நவீந்திர அனுகூலன்
பேராயர்—பிரதிஸ்தர்

## மகிழ்ச்சி ஆறுதல் - கிறிஸ்மஸ் செய்தி

நாடு கிடக்கின்ற கிடையிலை கிறிஸ்மஸ் தேவையா? என்றகேள்வி நம் காதுகளில் விழுகின்றது. நாட்டிலே அமைதியில்லை. போக்குவரத்துச் சீரழிவு மருந்து தட்டுப்பாடு, ஊரடங்கு உத்தரவு எல்லாமே தலைவிரித்தாடுகின்றன. கடந்த பதின்மூன்று வருடங்களாகத் தமிழ் மக்கள்.

''இன்பம் என்ற சொல்லைக் கேட்டதுண்டு அது எந்த நாளாவது எங்கள் வீட்டுப் பக்கம் வந்ததுண்டோ?'' என்றுதான் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

இந்த இருள்சூழ்ந்த உலகத்திற்குத்தான் இறைவன் ஊன் உரு எடுத்து வந்தார். ''பயப்படாதிருங்கள் உங்கள் எல்லாருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத்தரும் நற்செய்தியை அறிவிக்கிறேன்.'' என்ற தேவதூதர் அவரின் பிறப்பின் செய்தியை அறிவித்தனர். வார்த்தை மாம்சமாகிக் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள் வாசம் பண்ணினார், இதுவே நமது குதூகலத்திற்குக் காரணம்.

இந்த நற்செய்தியை நாம் தியானிக்கின்ற பொழுது நமது வேதனைகள் மறைந்து இன்பம் ஏற்படுகின்றது.

தூரதேசத்தில் உழைப்புக்காகச் சென்றிருக்கும் ஒரு தகப்பன், உழைப்பை முடித்து நிரந்தரமாக யாழ்ப்பாணத்தில் குடும்பத்தோடு இருக்கப்போகிறேன் என்று கடிதம் எழுதினால் அக்குடும்பத்திற்கு எத்தனை மகிழ்ச்சி! இனி குண்டுவீச்சுக்கள், ஷெல் அடிகள் நடந்தாலும், அப்பா எங்களோடு எப்பவுமே இருக்கப்போகிறார்! எனவே அவர்மீது பாரத்தைப் போட்டுவிட்டு நாம் நிம்மதியாக இருக்கலாம்.

இம்மானுவேல் — தேவன் நம்மோடு இருக்கின்றார்

முன்பு, எல் ஷட்டாயாக, விளக்க முடியாதவராக, ''இருக்கிறவராக இருக்கிறேன்'' என்று விளங்க முடியாததத்துவப்பொருளாக இருந்தவர் இப்பொழுது மனுவுருவுடன் நம் மத்தியில் வாசம் பண்ணுகிறார். நாம் ஒரு நண்பனோடு பேசுவது போல் அவருடன் பேசலாம்

இதுவே நமது குதூகலத்திற்குக் காரணம். இந்தத் தயவுக்கு முன்னால் குண்டுவீச்சு, சண்டை, சுற்றிவளைப்பு, தேடுதல் எம்மாத்திரம்?

ஆனந்தமாகத் தெய்வீக பாலனைத் துதிப்பதற்கு ஒன்று கூடுவோமாக

எஸ். ஜெபநேசன்
தென்னிந்திய சபைப் பேராயர்

## யாழ்ப்பாணக் கல்லூரி தர்மகர்த்தா சபைக்கூட்டம்

யாழ்ப்பாணக் கல்லூரி தர்மகர்தா சபைக் கூட்டம் இம்மாதம் 8ம் 9ம் திகதிகளில் பொஸ்டன் நகரில் நடைபெறவிருக்கின்றது இக் கூட்டத்திற் கலந்து கொள்ள நமது பேராயர் அதி வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் நவம்பர் மாதம் 22ம் திகதி புறப்பட்டார். அவர் இப்பயணத்தின்போது உலகின் பல பாகங்களிலுமுள்ள திருச்சபைத் தலைவர்களையும், மிஷன் பங்காளிகளையும் சந்தித்து வருவார். பல முக்கிய நகரங்களில் இவருடைய கலந்துரையாடலுக்காக ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் கல்லூரித் துணையதிபர் வண. ஏ ஏ. போல் அவர்களும், திரு. சி பி. பலிங் அவர்களும் இம்முறை தர்மகர்த்தா சபைக் கூட்டங்களிற் கலந்துகொள்வர்.

## ஒளி விழா

கோப்பாய் ஆசிரியர் கல்லூரியில் 'ஒளி விழா' 20-11-96 புதன் கிழமை நடைபெற்றது இன்னிசை கீதங்கள், கதம்ப நிகழ்ச்சிகள் பல இடம் பெற்றன. இவ்விழாவில் பல கலைக்கழக விரிவுரையாளர் வண. அன்ரன் மத்தாயஸ் நற்செய்தியை வழங்கினார். ஒவ்வொருவரும் தமக்குள்ளே தேங்கிக்கிடக்கும் உள்ளான ஒளியை விருத்தி செய்து தமக்கும் சமுதாயத்திற்கும் நிறைவாகப் பயன்படுவதையே இறைமகன் விரும்புகிறார் எனக் கூறினார். கல்லூரியின் புதிய அதிபராகிய கலாநிதி செ. சுந்தரம்பிள்ளை இயேசுபிரானின் மகோன்னத ஆளுமைக் கவர்ச்சியை வியந்துரைத்து கிறிஸ்தவ செயற்பாடுகள் ஆசிரியர் கல்லூரிக்கு ஒருவளமாக அமைகின்றது என இயம்பினார். கிறிஸ்தவ மறைச் செயலாளர் இவ்வருடம் மீண்டும கல்லூரிக்கு வந்து வருடாந்த ஒளி விழாவைக் கொண்டாட அருள்பாலித்த இறைவனுக்கு நன்றி பகர்ந்தார்.

## 'அர்த்தங்கள்' பல பொதிந்த ஆண்டவன் அவதாரம்!

1. 'அடிக்கடி 'அகதி'யாகி
அலைவதில் முதல்வராகும்'
திடுக்கிடும் அவல வாழ்வைத்
திருத்தியே; நாங்க ளெல்லாம்
மிடுக்குடன் சொந்த மண்ணில்
மேன்மைகள் எய்திவாழும்
படிக்கொரு நீதி செய்யப்
'பாலகன் யேசு' வந்தான்!

2. உள்ளத்தில் நஞ்சை ஏந்தி,
உதட்டினால் ''விருந்து''
வைத்துக்
கள்ளத்தில் ஓங்கி நிற்கும்
கயவரைப் புனிதராக்கி;
பள்ளத்தில் வீழ்ந்து நாறும்
பண்பினை நீக்கி; இன்ப
வெள்ளத்தில் நீந்த வைக்க
'வேதனே' குழந்தை யானான்!!

3. காக்கையைக் ''கிளிக''ளென்றும்,
கழுதையைக் ''குதிரை''யென்றும்,
மூக்கையே தொலைத்த கும்பல்
முகர்வதிற் ''சூரரெ''ன்றும்,
நாக்கினாற் பொய் அளந்தே
நடிப்பவர் ''பெரிய''ரென்றும்,
ஆக்கினை சூழ்ந்த வேளை
ஆண்டவன் இற(ர)ங்கி வந்
தான் !

4. 'திருமறை' நீதி தந்தும்,
திருந்திடா மனித ஜென்மம்
கருவறை விட்டு வந்தால்,
கர்த்தரின் பேரை வைத்துப்
''புதுமறை'' ஆக்கும்; அந்தப்
புன்மையை அழிப்பதற்கே,
பெருநிறை வான 'கர்த்தன்'
பிள்ளையாய்ப் பிறந்து வந்தான்!!

5. புன்னகை மறந்து; நெஞ்சிற்
'புண்ணகை' சுமக்குமெங்கள்
இன்னலை அகற்ற வந்த
இறைவனே! 'பெத்லஹேமில்'
சின்னமாய் விளங்கி; அற்பச்
சிறியரின் செய்கை கண்டு,
திண்ணமாய்த் தீர்ப்பு ரைத்த
தேவனுன் பிறந்த நாளாம்!!

6. 'ஓடிக் களைத் துருகி',
ஓராண்டு நிறைவுற்றும்;
வாடிக் களை இழந்தோர்
'வரலாற்றுப் புத்தேட்டை'
நாடிக் கை அணைக்கவரும்
'நத்தார்—புத்தாண்டில்'
வேடிக் கை மனிதர்தம்
வேதனைகள் தீரட்டும்!

ஜெ. கி. ஜெயசீலன்

# உலகம் உய்ய உத்தமனார் வந்துதித்தார்!

எல்லாம் வல்ல இறைவனின் திருவருளால் மீண்டும் நத்தார், விழாவை கிறிஸ்து பிறப்புப் பண்டிகையைக் கொண்டாடும் நல் வாய்ப்பைப் பெற்றுள்ளோம். எனவே நன்றிநிறைந்த உள்ளத்தோடு உலகம் உய்ய வந்தவரை உங்கள் இதயத்தில் ஏற்று, இப்பண்டிகையை நல்ல முறையில் கொண்ட ஒன்று கூடுங்கள்.

மேல் நாடுகளில் கிறிஸ்மஸ் பண்டிகை மிக்க விமரிசையாக குதூகலத்துடன் ஆடம்பரமாகக் கொண்டாடப்படுவதை நாம் அறிவோம். அவர்களைப் பின்பற்றி, நம்மிற் பலர் பெருஞ் செலவு செய்து கருத்தற்ற முறையில், சூழ் நிலைக்கு ஒவ்வாத வகையில், உயிர்ப்பற்ற முறையில் ஆடம்பரமாகக் கொண்டாடி வருதை நாம் காண்கிறோம். இதனைக்கண்டு நம் மத்தியில் வாழும் வறியவர்கள்—கிறிஸ்மஸ் பணக்காரரின் பண்டிகை என்றும், ஏழைகளாகிய தமக்குரிய பண்டிகை அல்ல எனக் கருதுகின்றனர். இது கவலைக்கிடமான நிலை என்பதை நாம் மறுக்க முடியாது.

கிறிஸ்மஸ் பண்டிகையின் கருப்பொருளை அறியாதவர்கள்தான் அதனைக் கருத்தற்ற முறையில் கொண்டாடி வருகின்றனர். இறைமகன் இயேசு எதற்காக மண்ணுலகில் வந்துதித்தார்? இறைவன் தனது மைந்தனை இவ்வுலகிற்கு ஈந்ததின் நோக்கம் என்ன? உயர் நிலையிலிருந்த இயேசு பிரான் தம்மைத்தாமே வெறுமையாக்கி ஏழைக்கோலம் பூண்டு, ஏழைக்குடும்பத்தில் எளிய சூழலில் தோன்றியதின் காரணமென்ன? இறைவன் தாம் படைத்த நல்ல உலகம் தேய்ந்து போவதைக்கண்டு, அதனை உய்விக்கத் தன் மைந்தனை அனுப்பினார். இதனை நாம் நன்கு உணர்ந்து தெளிய வேண்டும் அத்துடன் கிறிஸ்துவின் வருகையின் உட்பொருளை நமது சபையாருக்கு குறிப்பாக ஏழைமக்களுக்கு – பலவிதமான கஷ்டங்களை அனுபவித்துக் கதியற்ற நிலையில் சோர்ந்து நலிந்திருக்கும் மக்களுக்கு விளக்க வேண்டும். இத்திருவருகை ஏன் அனைவருக்கும் உரிய நற்செய்தியென அறிவிக்கப்பட்டுள்ளதென அவர்கள் அறிய வேண்டும் அப்பொழுதுதான் அவர்களும் நத்தார் விழாவைக் கருத்துடன் கொண்டாடிப் பயன் பெற முடியும்.

கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடப் பலவிதமான ஆயத்தங்களைச் செய்யும் நமது சபைகள் – இன்றையப் போரின் விளைவால் – தமிழ்ப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள அவல நிலையை உற்று நோக்க வேண்டும். ''உடுக்கவோ ஒரு கந்தை மேல் இல்லை; உண்ணவோ உணவுக்கு வழியில்லை; படுக்கவோ பழம் பாய்க்கும் கதியில்லை''- என வள்ளலார் கூறியது போல் இன்றும் நம் மக்களிற் பலர் இத்தகைய வறுமையின் கொடுமையை அனுபவிக்கின்றனர் இந்த அனுபவத்தை நமது ஆண்டவரும் அனுபவித்திருக்கிறார் அவர் கூறுவதைக் கவனியுங்கள்–'' —நரிகளுக்கு பதுங்கு குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு மனுமகனுக்கு அதாவது தனக்கு தலைசாய்க்கக் கூட இடமில்லை'' (லூக் 9:58)என்றார்.

இத்தகைய வேதனைகளை அனுபவித்து வரும் மக்களுக்கு அளிக்கப்பட்ட நற்செய்தி யாதெனில் நீங்கள் அனுபவித்து வரும் வேதனைகளை நீக்க, துயரங்களைப் போக்க, உங்கள் ஏக்கங்களை அகற்ற அவர் ஆயத்தமாய் உங்கள் அருகில் வருகிறார். ஆகவே, நீங்கள் பதறாதீர்கள், அவர் பக்கத்திலிருக்கிறார். ''நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, கை விடுவதுமில்லை'' (எபி 13:5) என்று அவர் கூறியவாக்கு ஒருபோதும் வழுவாது.

''தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல், நிலைவாழ்வு பெறும் பொருட்டு, அந்தமகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு வைத்தார்'' (யோ3:16) இது தான் கிறிஸ்து பிறப்பு விழாவின் கருப்பொருள். இதனை நன்கு புரிந்து கொண்டவர்கள், தங்கள் உள்ளத்தில் இயேசு பாலகனை ஏற்று மகிழ்வுடன் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட முடியும். நாம் வாழும் சமுதாயமும் உயிர்ப்படைந்து மாற்றமடையும். நத்தார் பண்டிகையின் போது நல்மாற்றம் வருவதாக.

''அருள்நிறை வள்ளல் பரிவுடன் வந்தார்.
அன்பரே வாருங்கள்! – இந்த
அருள் மழைப் பொழிவை அனைவரும் அருந்த
—ஒருமித்து வாருங்கள்!!

உங்கள் அனைவருக்கும் நத்தார் – நவவருட நல்வாழ்த்துக்கள்

அருள்திரு. தா. இரா. அம்பலவாணர்
கிறிஸ்தவ இறையியல் கல்லூரி
வட்டுக்கோட்டை.

# இம்மானுவேல் -- இறைவன் நம்மோடு இருக்கின்றார்!

கிறிஸ்துவின் பிறப்புச் சம்பந்தமாக சுவிஷேசங்களிற் கூறப்படும் பிரதான கருத்து, 'கடவுள் நம்மோடிருக்கின்றார்' என்பதே மத்தேயு, லூக்கா, சுவிஷேசங்களில், கிறிஸ்து ஏரோது அரசனுடைய காலத்திற் பிறந்தார். சீரியா நாட்டில் சிரேனியூ என்பவன் தேசாதிபதியாகவிருந்தபோது குடிமதிப்பு எழுதப்பட்டது. பலஸ்தீனாத் தேசத்தின் பெத்லேகம் ஊரிலே மாட்டுத் தொழுவத்திலே கன்னி மரியாளுக்குப் புதல்வனாக அவதரித்தார்.

மேய்ப்பர்கள் வயல் வெளியிலே தங்கியிருந்து, மந்தையைக் காவல் காத்துக் கொண்டிருந்தபோது, அவர்களுக்கு நற்செய்தி கூறப்பட்டது, உலக ரட்சகர் எங்கே பிறப்பார் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்ட வானசாஸ்திரிகளுக்கு 'நட்சத்திரம்' வழிகாட்டியது.

இந்தச் சம்பவங்களிலிருந்து நாமறிவது யாதெனில், கடவுள் தம்மை வெளிப்படுத்த முற்பட்டபோது. வரலாற்றுக்குட்பட்ட காலத்திலே வந்துதித்தார். அவருடைய பிறப்பின கதைகள், சரித்திரம், அரசியல், புவியியல், பொருளாதாரம் பற்றியெல்லாம் மிக விரிவாகக் கூறுகின்றன. இவை, கடவுள் நம்மோடிருக்கின்றார் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

1995—1996 ஆண்டுகளின் அநுபவங்கள், தமிழ் மக்களுடைய வரலாற்றிலே மறக்க முடியாதனவே. தங்கள் சொந்த ஊரையும், சொத்துக்களையும்விட்டு, அகதிகளாகி ஆதரவற்றவர்களாகி, குடிசைகளிலும், தெருவோரங்களிலும் வாழ வேண்டிய நிலையேற்பட்டது. மனுஷகுமாரன் இந்த உலகத்திற்கு வந்தபோது, அன்றும் இப்படிப்பட்ட ஓர் அவலமேற்பட்டது. அவருக்கும் மாட்டுத்தொழுவத்தையும், சிலுவைமரத்தையும் இருப்பிடங்களாக வழங்கினார்கள். அவர் பக்தியுடனும், தாகத்துடனும், கவலையுடனும் களைப்புடனும் இருக்கின்றார். இப்படிப்பட்ட சோக அநுபவங்களை உணர்ந்தவராதலால், நம்முடைய இன்றைய இடர் அநுபவங்களையும் நன்கு உணரக் கூடியவராயுள்ளார். எனவே தான் இந்தத் துயர நாட்களிலும் கடவுள் நம்மோடிருக்கின்றார்.

எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து வேதனை தாங்க முடியாமல் ஓலமிட்ட இஸ்ரவேல் மக்களின் கூக்குரலைக் கேட்டு அவர்களை விடுவிக்கும்படியாக அவர் பாளையம் இறங்கினார்.

''அவர் என் அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்.
இது முதல், என்னைப் பாக்கியவதி என்பார்கள்.''

என்று கன்னிமரியாள் சந்தோஷப்பட்டதுபோல, நாமும் நமது அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, சமாதானத்துடன் வாழ, 'தெய்வபாலன்' கிருபை புரிவானாக.

மனுஷர் மேற் பிரியமும், பூமியின் மேற் சமாதானமும் உண்டானால், உன்னதத்தில் இருக்கின்ற தேவனுக்கு மகிமை உண்டாகும். ''சமாதானத்தின் தேவன் நம்மோடு இருப்பாராக!''

திரு. ஜி. இராஜநாயகம்
முதல்வர்—யாழ்ப்பாணக்கல்லூரி
வட்டுக்கோட்டை.

# இருள் விலகி; ஒளிபிறக்கட்டும்

துன்பத்திலும் துயரத்திலும் அழுந்திக்கிடந்த மானிடஜாதியை மீட்க ஆண்டவன் எம்மை அண்மித்து வந்தான். எங்கும் ஒளி. எதிலும் பிரகாசம், எல்லாம் நன்மை என்ற புளகாங்கிதப் பேரலைகளில் மானிடஜாதி மூழ்கிக் களித்து முகமலர்ச்சி கண்டது. அன்பும் சமாதானமும் எங்கும் வியாபகமாகப் பாலன் பிறந்தான். இருள் விலகியது ஒளிபிறந்தது. எங்கள் வாழ்விலும் இருள் விலகி ஒளிபிறக்க நாம் வேண்டுதல் செய்வோம்.

இந்த நன்நாளை, இனியநாளை, இறையுணர்வோடு இன்பகரமாக நாம் கொண்டாடுவோம். எல்லோரும் எல்லா நன்மைகளையும் பெற, இவ்வுலகுக்கு வந்த தேவகுமாரனை வாழ்த்துவோம். தேவவிடத்திலே எமது திரு இருதயத்தைக் காணிக்கையாக்குவோம்.

எங்கள் இதய பாரங்களெல்லாம் இறங்கி நட்புடனும் சமாதானத்துடனும் நமது நல்வாழ்வு பொலிவு பெறவேண்டுமென்று இந்த நத்தார் தினத்திலே தேவகுமாரனை வேண்டிக்கொள்வோம்.

சி. வி. செல்லையா
அதிபர்
உடுவில் மகளிர் கல்லூரி.

# யார் இந்த "ஸாண்டா கிளாஸ்" தாத்தா?

துருக்கி தேசத்து விசியா நாட்டில், பட்ரஸ் என்னும் ஊரில், பாதிரியார் ஒருவருக்கு நிக்கோலாஸ் என்பவர் மகனாகப் பிறந்தார். இவர் இளம் வயதிலேயே ஆசாபாசங்களைத் துறந்தார். எளிய வாழ்க்கையையே மிகவும் நேசித்த இவர் இயேசு நாதரிடம் மிகுந்த நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டார். இவர் ஆன்மிக நூல்களை படிப்பதிலும் அதிக ஆர்வம் உடையவராகவிருந்தார். நிக்கோலாஸ் தமது பெற்றோர் வைத்து விட்டுச்சென்ற சொத்துக்களையும் ஏழை எளியவர்களுக்காகச் செலவிட்டார்.

நிக்கோலாஸ் பாதிரியார் ஒரு முறை இயேசு பிறந்த ஊரான பெத்லகேமுக்கு யாத்திரை செல்ல விரும்பி கப்பலில் புறப்பட்டார். இவர் பயணம் செய்த கப்பல் புயலில் அகப்பட்டது. ஆனால் இறைவனிடம் இவர் மன்றாடிப் பிரார்த்தனை செய்த போது கடல் கொந்தளிப்பும் புயலும் அமர்ந்தது. அச்சமயத்தில் அந்தக் கப்பலில் வேலை செய்த மாலுமி ஒருவன் பாய் மரத்திலிருந்து தவறி விழுந்து உயிர் துறந்தான். இதைக்கண்டு மனதுருகிய நிக்கோலாஸ் பாதிரியார் செய்த பிரார்த்தனையால் மற்றுமொரு அற்புதம் நிகழ்ந்தது. ஆம் அந்த மாலுமி மீண்டும் உயிர் பெற்றெழுந்தான்.

பெத்லகேமை நிக்கோலாஸ் பாதிரியார் சென்றடைந்து, அங்குள்ள மாதா கோயிலுக்கு இவர் சென்ற போது, அத்தேவாலயத்தின் கதவுகள் தாமாகவே திறந்து அவரை எதிர் கொண்டழைத்தன. நிக்கோலாஸ் பாதிரியார், குழந்தை இயேசு பிறந்த தினமான கிறிஸ்மஸ் தினத்திலே சின்னக் குழந்தைகளுக்கு பல வித பரிசுகளைக் கொடுத்து மகிழ்விப்பது வழக்கமாகக் கொண்டிருந்தார். இவர் கி. பி 343 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஆறாம் திகதி உயிர் நீத்தார்.

அதன் பின்னர் இவர் 'செயின்ட் நிக்கோலாஸ்' என்ற டனிதப் பெயரினால் அன்புடன் அழைக்கப்பட்டார் நெதர்லாந்து மக்கள் இவர் மறைந்த தினத்தை குழந்தைகள் தினமாகக் கொண்டாடி வந்தனர். காலப்போக்கில் 'செயின்ட் நிக்கோலாஸ்' (புனித நிக்கோலாஸ்) என்ற பெயர் திரிந்து "ஸாண்டாகிளாஸ்" என்ற புதுப் பெயர் வந்தது. அது போலவே குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கும் வழக்கமும் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு மாற்றப் பட்டது.

இன்றும் மார்கழி உறை பனிக் காலத்தில் கிறிஸ்மஸ் இரவில் 'ரெயிண்டீர்' என்ற கலைமான்கள் பூட்டிய பனிச் சறுக்கு வண்டியில் 'ஸாண்டா கிளாஸ்'' தாத்தா பரிசுப் பொருள்களை நிரப்பிக் கொண்டு ஒவ்வொரு வீட்டின் கணப்பு அடுப்பின் புகை போக்கி வழியாக இறங்கி, தமது தோளில் சுமந்து வரும் பல விநோத பரிசுகளை, உறங்கிக் கொண்டிருக்கும் தமக்கு அருகில் கட்டப்பட்டிருக்கும் நீண்ட காலுறைகளில் போடுவாரென்பது சின்னக் குழந்தைகளின் ஆவலும் நம்பிக்கையுமான எதிர்பார்ப்பு ஆகும்

— A J G.

---

## சமாதான....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஷர் மேல் பிரியத்தையும் உண்டாக்கியது. ஆண்டவரின் பிறப்பு தனி ஒரு குலத்திற்கு விடுதலையைத் தருவதாக அமையாது முழு மனித குலத்துக்குமே மீட்பை அளிக்கும் ஒன்றாகக் காணப்படுகின்றது. ஆண்டவரின் பிறப்பு உலகிலே பிரிவினையை ஏற்படுத்தாது உலகில் சமாதானத்தை ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றது. ஆண்டவரின் பிறப்பு நாடுகளுக்குள் சமாதானத்தை ஏற்படுத்துவது மட்டுமன்றி ஒவ்வொரு தனி மனிதனின் மனத்திற்கும் சமாதானத்தைத் தருவதாக அமைகின்றது ஆம் ஆண்டவர் சமாதானப் பிரபுவாகப் பிறக்கின்றார்.

இன்று உலகில் எங்கு பார்த்தாலும் சமாதானத்திற்கான ஏக்கம் காணப்படுகின்றது. பனிப்போர் ஓய்ந்ததன்பின் (Cold war) நாடுகளுக்கிடையே ஓரளவு அமைதி நிலவினும் நாடுகளுக்குள்ளே இனம், மதம், மொழி, கலாசார அடிப்படையிலே விரிசல்களும், போராட்டங்களும் அதிதீவிரமடைந்து வருகின்றது. இந்நிலையிலே ஆண்டவரின் பிறப்பு நமக்கு உணர்த்துவது என்ன? ஆம் ஆண்டவர் மீண்டும் சமாதானப் பிரபுவாக நம்மிடையே வருகிறார். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், என்னுடைய சமாதானத்தையே உங்கள் நடுவில் வைத்துப் போகிறேன் எனக் கூறிய ஆண்டவர் சமாதானப் பிரபுவாக மீண்டும் நம் மத்தியில் பிறக்கின்றார். இத்தகைய சமாதானப் பிரபுவை நாம் நம்முடைய உள்ளத்திலே ஏற்று வீட்டிலே. நாட்டிலே, அகிலத்திலே சமாதானத்தை ஏற்படுத்தி அதற்காக உழைக்க கடமைப்பட்டுள்ளோம் சமாதானப் பிரபு நம் மத்தியில் வருகிறார் நாம் நமது உள்ளத்தைத் திறந்து இடங் கொடுப்போமா?

D. S. S.

---

# கிறிஸ்மஸ் பண்டிகை தோன்றியது எப்படி

உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் பண்டிகையை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். கிறிஸ்துவின் (CHRIST) பிறப்பை நினைத்துச் செய்த திருவிருந்திலிருந்து (MASS) கிறிஸ்மஸ் (CHRIST MAS) என்ற பெயர் வந்தது. இது முதலில் ஜனவரி 6 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. ஐரோப்பாவில் காணப்பட்ட குளிர்கால விழா பின்னர் கிறிஸ்து பிறப்பு விழாவாக ஆசரிக்கப்பட்டது. வட ஆபிரிக்காவில் இவ்விழா 4 ஆம் நூற்றாண்டில் இருந்தே கொண்டாடப்பட்டது.

அதே நூற்றாண்டிலேயே டிசம்பர் 25 ஆம் திகதிக்கு இவ் விழா மாற்றப்பட்டது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று. அந் நாட்களில் ரோமையரினால் கொண்டாடப்பட்ட சூரிய விழாவுக்கு எதிராக இது தொடக்கப் பட்டது. இரண்டாவது, இயேசு மார்ச் 25 ஆம் திகதி இறந்தார் என்ற கணிப்புப்படி அவர் டிசம்பர் 25 ஆம் திகதி பிறந்தார்: எருசலேம் சபை 5 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே இவ் விழாவைக் கொண்டாட ஆரம்பித்தனர். ஆனால் வைதீக ஆர்மீனியர்கள் இந்தநாளை ஏற்காமல் இப்போதும் ஜனவரி 6 ஆம் திகதியே கொண்டாடுகின்றனர்.

கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களிலே கிறிஸ்மஸ் மரம் வைக்கும் பழக்கம் 16ஆம் நூற்றாண்டிலேயே ஜேர்மனியில் ஆரம்பித்தது. 19 ஆம் நூற்றாண்டிலேயே வாழ்த்து அட்டைகள் அனுப்பும் பழக்கமும், பரிசுகள் கொடுக்கும் பழக்கமும் ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப் பட்டது. கிறிஸ்மஸ் தாத்தாவை அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர்கள் அமெரிக்கர்களே திருச்சபையின் வழிபாட்டிலே கிறிஸ்துவின் பிறப்பு தந்தையின் உள்ளத்திலும், மரியாளின் உதிரத்திலும், விசுவாசியின் ஆன்மாவிலும் அர்த்தம் பெற வேண்டும்.

A. S. T.

---

# "இம்மானுவேல்"

மானிட வாழ்வில் கூடஇருத்தல், உடனிருத்தல் என்பது முக்கியமானதாகும். இதற்கு எதிராக தனிமைப்படுத்தல், விட்டு பிரிதல் என்பது பாரியதுன்ப அனுபவத்தை கொடுக்க கூடும். ஆனால் நத்தார் காலம் வந்துவிட்டால் "உடனிருத்தல்" அதாவது "கடவுள் மானிடரோடு இருக்கிறார்" என்கின்ற சொற்தொடர் "இம்மானுவேல்" என்ற அடைப்பு வசனத்திற்கூடாக பிரசங்கங்களிலும் பாடங்களிலும் அதிகமாக பாவிக்கப்படுகின்றது.

மத்தேயு நற்செய்தி நூலில் இயேசுவின பிறப்பை யோசேப்புக்கு முன்னறிவித்த இறைவனின் தூதுவர். பிறக்கும் குழந்தைக்கு என்ன பெயர் வைக்க வேண்டும் என்று கூறுகின்றார். குழந்தைக்கு வைக்கப்படும் பெயர் இயேசு இதன் அர்த்தம் தமது மக்களை பாவங்களில் இருந்து இரட்சிப்பார். இககுழந்தை எவ்விதமாக இந்த இரட்சிப்பின் வேலையை செய்ய போகிறது என்றால் இம்மானுவேலனாக இருப்பதால் அதாவது மானிடரோடு கூடவாழப் போவதால் மானிடனா மீட்க போகிறது என்பதை இறைவனின் தூதுவர் விளங்குகின்றார். இந்த "இம்மானுவேல்" என்கின்ற பதம் பழைய ஏற்பாட்டில் முதலாம் ஏசாயாவால் பாவிக்கப்பட்ட ஒரு பெயர் சொல்லாகும் இப் பெயர் சொல் பயன்படுத்தப்பட்ட பின்னணியத்தை அறிந்து கொள்வோம் என்றால் இன்றைய தமிழ் மக்களாகிய எமக்கு நத்தார் செய்தி எப்படி அமையும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

கி. மு. 734ம் ஆண்டு சீரியாவும் வட இராஜ்ஜியமாகிய இஸ்ரேலும் வல்லரசாகிய அசீரிய வுசகு எதிராக போர் செய்ய எத்தனித்த போது தென் நாடாகிய யூதா. அசீரியாவின் அழிவை விரும்பாமல் அசீரியாவோடு கூட்டு சேர்ந்து கொள்கிறது. இந்நிலையில் சீரியாவும் வட இராஜ்ஜியமும அசீரியாவை தாக்க முன்பு யூதாவை தாக்க முடிவு செய்கின்றது. இந்நிலையில் யூதாவின் அரசனாகிய ஆகாஸ் அசீரியாவிடம் பாதுகாப்பை நாடி ஓடிபோகிறார். அப்போது முதலாம் ஏசாயா ஆகாசிடம் சென்று அரணும் பாதுகாப்பு உனக்கு சுதந்திரத்தை தந்தவரிடம் நீ அடைக்கலத்தை தேடாமல் உன் அடைக்கலத்தை சாதகமாக்கி உன்னை அழித்துவிட கூடியவனிடம் அடைக்கலம் தேடுகிறாயே என கண்டிக்கிறார். கர்த்தர் உனக்கு அடைக்கலத்தையும் பாதுகாப்பையும் தரப்போகிறார். இது நடக்கும் இதுநடக்கும் என்பதற்கு அடையாளம் ஒன்றைஉனக்கு கடவுள் கொடுப்பார். அது என்னவென்றால் ஒரு இளம்பெண் கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெற்று இம்மானுவேலன் என்று பெயரிடுவாள் என்று கூறுகின்றார். அதாவது கடவுளின் அடைக்கலம் பாது

( 8ஆம் பக்கம் பார்க்க)

---

# கிறிஸ்மஸ் மரம் வந்ததெப்படி?

எட்டாவது நூற்றாண்டில் ஸ்காண்டினேவியா மிஷனரி ஒருவரைப் பற்றியுள்ள ஒரு பழங்கதையில் முதல் கிறிஸ்மஸ் மரம் ஏற்படுத்தியதைக் குறித்துக் கூறப் பட்டுள்ளது அந்தக் கதையில் கிறிஸ்துவுக்கு முன் இருந்த "ட்ருயிட் பூசாரிகள் "ஓக்" மரத்தை (Oak tree) வணங்கி வந்தனர். கிறிஸ்மஸ் தினத்திற்கு முந்தின நாள் அந்த மிஷனரி பூசாரிகள் நரபலி செலுத்த எண்ணிச் சுற்றிக் கூடியிருந்த 'ஓக்' மரத்தை வெட்டி விட்டார் அது விழுந்த போது அதற்கு அப்பால் 'பர் மரம் (Fir tree) ஒன்று தெய்வீகமாக முளைத்திருக்கக் கண்டு அந்த மிஷனரி "இதோ ஜீவ மரம்! அதில் யாதொரு ரத்தக்கறையும் இல்லை. அதுவே நம் ஆராதனையின் அடையாளமாகும். அது ஆகாயத்தை எப்படிச் சுட்டுகிறது பாருங்கள்! அதை நாம் கிறிஸ்து பாலன் மரம் என்று அழைப்போமாக. அதை எடுத்து உங்கள் பிரபுவின் வீட்டுக்கு கொண்டு போங்கள், இனி மேல் வெட்கக் கேடான அந்தப் பாழும்ஆசாரத்தை அநுசரிக்கமறைவான காட்டை தேடவேண்டாம். நாம் இனி மகிழ்ச்சியுடனும் அன்புடனும் பிள்ளைகளோடு வீட்டிலேயே கொண்டாடுங்கள் அந்தப் பாழும் "ஓக்" மரம் விழுந்து விட்டது இனி இந்த கிறிஸ்து ஜனன நாளைக் கொண்டாடாத குழந்தைகள் எங்கும் இருக்கமாட்டார்கள், அன்பின் அடையாளமான இந்த மரத்தண்டை வந்து கூடுங்கள் என்றார்.

A. S.

நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ
எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி

# உதயதாரகை

ஆதீன காரியாலயம் வட்டுக்கோட்டை
Estd 1841
மலர்: 157 22 - 12 - 1996 இதழ்: 15

## துன்பத்தின் மத்தியிலும் மகிழ்ச்சி தரும் கிறிஸ்மஸ்

நாம் வருடந்தோறும் நினைவு கூர்ந்து கொண்டாடும் பண்டிகை இயேசு கிறிஸ்துவின் பிறப்பு பண்டிகை ஆகும். கிறிஸ்மஸ் நாட்கள் சந்தோஷம் நிறைந்த, ஆசீர்வாதமான பாக்கிய நாட்களாகும். அத்துடன் நத்தார்தினம் அகில உலகுக்கும் சமாதானத்தை நினைவுறுத்தும் தினம். பிணக்குறும் இன்றைய உலகு போரைச் சற்றே நிறுத்தி மனச்சான்றைத் தட்டியெழுப்பி மீளாய்வு செய்ய வேண்டிய தினமாகும் அகில உலகமும் கிறிஸ்து பிறப்பு விழாவை மகிழ்ச்சியாக கொண்டாடும் இவ்வேளையில் எமது தமிழ் மக்கள் நத்தார் பண்டிகையைச் சிறப்புடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாட முடியாது பல துன்பங்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஏசாயா 9:2 ல் இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்கள் மேல் வெளிச்சம் பிரகாசித்ததென்று சொல்லப்பட்டவாறு, இன்று இருள் நிறைந்த துன்பம் நிறைந்த தமிழ் மக்கள் வாழ்வில் பிறந்து, இருள் நீக்கி, துன்பம் போக்கி சமாதான வாழ்வை தர வேண்டுமென மக்கள் வாஞ்சிக்கிறார்கள்.


வேதனை துன்பங்கள் மத்தியில் பிறந்த இயேசு மக்களுக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாக இருந்தது போல நமது துன்பங்களும், வேதனைகளும் நமக்குக் கலக்கத்தைக் கொடுத்தாலும் நாம் அவற்றிலிருந்து விடுபட்டு இறை அமைதியையும் சமாதானத்தையும் பெற இறைவன் இயேசு வழி காட்ட வேண்டும்.

கிறிஸ்மஸ் ஒரு மகிழ்ச்சியின் விழா. 1996ம் ஆண்டில் கிறிஸ்மஸை நினைவு கூரும்போது கடந்த சில வருடங்களைப்போல கவலையிலும் அடுத்து என்ன நடக்குமோ என்ற பீதியில் தான் இருக்கிறோம். அழிவுகளும் ஆக்கிரமிப்புகளும், அடக்குமுறையும், தான்தோன்றித்தனமான போக்குகளும், அராஜக செயல்களும் அதிகரிப்பினால் அதன் தாக்கங்கள் ஒரு அமைதியான அன்பும் மகிழ்ச்சியும் நிறைந்த சமூகத்தில் எங்களை வாழவிடாது தடுத்துக் கொண்டிருக்கின்றன, மேலும் போக்குவரத்து கஷ்டம், சீரான உணவு விநியோகமின்மை, கைதுகள், காணாமற் போதல், கைக்குண்டு வீச்சு போன்றவை. மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு குந்தகமாகவே உள்ளன.

நாம் எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும் கிறிஸ்மஸ் தன் மகிழ்ச்சித் தன்மையை இழந்துவிட முடியாது. நாம் வாழுகின்ற ஒரு துன்பமான சூழலில் அத்துன்பங்களின் மத்தியில் மகிழ்ச்சியாக வாழவும் கிறிஸ்மஸை மகிழ்ச்சியாகக் கொண்டாடவும் நாம் தான் எம்மிலும் எம்மைச் சுற்றியும் மகிழ்ச்சிக் கோடுகளை வரைந்து கொள்ள வேண்டும்.

பயப்படாதிருங்கள்! இதோ எல்லா மக்களுக்கும் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று தாவீதின் ஊரிலே உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார், என்ற நற்செய்தியின் மகிழ்ச்சிச் செய்திகள் எம் மண்ணில் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாக இருக்கட்டும்.

# சிறார் சோலை



அன்பான தம்பி தங்கைகளுக்கு:-
தாரகை அண்ணாவின்
நத்தார் இனிய வாழ்த்துக்கள்!

இவ்வாரச் சிந்தனைக்கு:-

### வறுமை ஒரு தடையல்ல

★ ஆபிரகாம் லிங்கன்:- இவர் ஒரு ஏழை விறகு வெட்டியின் மகன். அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி ஆனார். உலகம் போற்றிய பெரும் தலைவர்,

★ டாக்டர் சாமுவேல் ஜான்சன்:- வறுமையில் வாழ்ந்த ஒரு புத்தக வியாபாரியின் மகன். உலகம் போற்றும் இலக்கிய மேதையும், ஆங்கில அகராதியின் ஆசிரியரும் ஆவார்.

★ ஹென்றிஃபோட்:- உலகம் போற்றும் விஞ்ஞானியாக மாறிய இவர் ஒரு பண்ணைத் தொழிலாளியின் மகன்.

★ ஜோசப் ஸ்டாலின்:- சோவியத் நாட்டின் தலைவரான இவர் செருப்புத் தைக்கும் ஏழைத் தொழிலாளியின் மகன்.

★ தோமஸ் அல்வா எடிசன்:- வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்த படகு செலுத்தும் ஒருவரின் மகன். இவர் விஞ்ஞானியாக ஆகினார்.

★ பெஞ்சமின் பிராங்கிளின்:- விஞ்ஞானியான இவர் ஒரு மெழுகு வர்த்தி வியாபாரியின் மகன்.

**B. ஜெனேஸ் ஜெகசுதன்**
யாழ்ப்பாணக்கல்லூரி
பங்கர் விடுதி.

### அன்பான தம்பி தங்கைகளே!

நத்தார் காலம் சமீபிக்கிறது. சமீபிக்கிற நத்தாரில் நாம் என்னென்ன செய்யலாம் என்று நீங்கள் ஒரு பட்டியலே போட்டிருப்பீர்கள். எமது உற்றார், உறவினர் நண்பர்களுக்கு என்னென்ன பரிசுப் பொருட்கள் வழங்கலாம் என்று சிந்தனை செய்வீர்கள்.

நத்தார் என்றால் இயேசு கிறிஸ்து எம் மத்தியில் பிறந்ததை நினைவு கூர்ந்து கொண்டாடப்படுகின்ற ஒரு விழா என்பதை நாம் அறிவோம். எனவே தனது பிறந்தநாளை நினைவு கூருகிற அந்த நாளிலே யேசு பப்பா விரும்புவதை செய்வது முக்கியமல்லவா? ''இந்த சிறியரில் யாருக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்'' என்று யேசு பப்பா கூறுகிறாரல்லவா?

அழகான ஒரு கிராமம். அந்தக் கிராமத்திலே ஒரு பணக்காரக் குடும்பமும் ஒரு ஏழைக் குடும்பமும் வாழ்ந்து வந்தன. அடுத்த நாள் நத்தார். பணக்காரக் குடும்பத்தின் மகிழ்வினைக் கூறவும் வேண்டுமா? நல்ல நல்ல குடிவகைகள், தின் பண்டங்கள், உடுபுடவைகள் என பணக்காரக் குடும்பம் அடுத்த நாள் நத்தாரைக் கொண்டாட நன்கு ஆயத்தம் செய்தது.

முன் வீட்டிலிருந்த ஏழைக் குடும்பத்தினருக்கு இருந்த ஒரே கவலை என்ன தெரியுமா? அடுத்த நேரம் தமது வயிற்றுப் பிழைப்புக்காக காய்ச்சுவதற்கு ஒரு சிறகை அரிசி கூட இல்லையே என்பது தான். அந்த வீட்டிலிருந்த தாயார் எப்படியோ பாடுபட்டு, ஊராரின் ஏச்சுப் பேச்சுக்களை வாங்கி, அரைக்கிலோ அரிசியை எங்கேயோ வாங்கிக்கொண்டு வந்து கஞ்சி காய்ச்சுவதற்கு ஆயத்தஞ் செய்தாள்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## சிறார் சோலை...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்பான தம்பி தங்கைகளே!

நத்தாரும் வந்தது பணக்காரக் குடும்பத்தில் இருந்தவர்கள் நன்கு உண்டு உண்டு இனியும் உண்டால் வயிறு வெடித்து விடும் என்ற நிலையில் படுத்து விட்டனர்.

ஏழைக் குடும்பத்தில் இருந்தவர்கள் கஞ்சியை காய்ச்சிக் கொண்டிருந்தனர்.

யேசு பாப்பாவுக்கு ஒரு ஆவல் பிறந்தது ''தனது பிறந்தநாளை நினைவு கூரும் இந்நாளிலே இந்த இரு வீடுகளுக்கும் போக வேண்டும்'' எனும் ஆவலே அது. நத்தார்பப்பா போன்று உடை உடுத்துக்கொண்ட யேசு பப்பா முதலில் பணக்கார வீட்டுக்கு சென்று கதவைத் தட்டினார் பணக்காரன் கதவைத் திறந்து பார்த்து ''என் ...?'' என்று எரிச்சலுடன் கேட்டான் ''ஐயா எனக்கு சாப்பிட ஏதாவது கொடுங்களேன்.'' என்றார் யேசு பப்பா. ''இங்கு ஒன்றுமில்லை வெளியில் போ'' என்று அடித்து விரட்டினான் பணக்காரன்.

நான் தான் யேசு என்று கூறிப்பார்த்தார் யேசு பணக்காரன் அவரை ஏளனஞ் செய்து விரட்டினான். மிகவும் மனம் வருந்திய படி முன் இருந்த ஏழைக் குடும்பத்திடம் சென்றார் யேசு பப்பா. அந்த ஏழைக்குடியானவன் யேசுவை ஒரு கதையும் கதைக்க விடாமல் உள்ளே கூட்டிச்சென்று தான் காய்ச்சிய கஞ்சியில் சிறிதை கொடுத்தான் இயேசு கஞ்சியை குடித்துவிட்டு ''நான் தான் யேசு'' என்றார். ''ஐயா நீர் தான் யேசு என்பது எனக்கு முன்னமே தெரியும். உம்மைத் தவிர என்வீட்டுக்கு யார் வரப்போகிறார்கள்?'' என்று வேதனையோடு கூறினான் ஏழைக் குடியானவன்.

இந்த இரு குடும்பங்களில் எந்த குடும்பத்தினித்தம் இயேசு மகிழ்ந்திருப்பார்?

அன்பான தம்பி தங்கைகளே வருகின்ற நத்தார் நாளிலே ஏழைகளை ஆதரித்து, உண்ண வழியற்றோர்கு உணவளித்து எம்மாலே ஏற்ற சிறு உதவிகளை அவர்களுக்கு செய்வோமா? நாம் தனக்கு விழா எடுப்பதையும்விட எமது இருதயத்தை தனக்கு அர்ப்பணிப்பதைத்தான யேசு பப்பா ஆவலுடன் எதிர்பார்க்கிறார்.

சிந்திப்போமா? செயற்படுவோமா??

உங்கள் அனைவரோடும்
நத்தார் கால குதூகலம்
கூட இருப்பதாக!

✲ ✲ ✲ ✲ ✲ ✲

### சென்றவாரப் புதிரின் விடை

முதலில் பத்துசாக்குகளையும் இலக்கமிடுக. பின்பு முதலாம் இலக்க சாக்கில் ஒரு பொதி இரண்டாம் இலக்க சாக்கில் இரண்டு பொதி, மூன்றாம் இலக்க சாக்கில் மூன்று பொதி எனும் ஒழுங்கில் பொதிகளை எடுக்க. பின்பு யாவற்றையும் நிறுத்துப் பார்க்க. 55 கிலோ 100கிராம் இருப்பின் முதலாவது சாக்கிலேயே நிறை கூடிய பொதி உள்ளது 55 கிலோ 200கிராம் இருப்பின் இரண்டாவது சாக்கிலும் 55 கிலோ 300 கிராம் இருப்பின் 3வது சாக்கிலும் நிறை கூடிய பொதி இருக்கும் இந்த ஒழுங்கில் ஏனையவற்றையும் கணிப்பிடலாம். உ+மாக 55 கிலோ 900 கிராம் இருப்பின் 9வது சாக்கிலும் 56 கிலோ இருப்பின் 10வது சாக்கிலும் அப்பொதி இருக்கும்.

✲ ✲ ✲ ✲ ✲ ✲

### இவ்வாரப் புதிர்

ஒரு வீட்டில் ஒரு மனிதன். அவன் பொருட்கள் வாங்கச் செல்ல வேண்டுமாயின் ஒரு ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும், ஆற்றைக் கடக்க ஒரு தோணி உள்ளது. அத்தோணியில் அவனுடன் இன்னொரு பொருள் மட்டுமே செல்லாம். அவன் சந்தைக்கு சென்று ஒரு புலி, ஒரு ஆடு, ஒரு கீரை வாங்குசிறான். புலியை அவன் முதலில் கொண்டுவர வருவானானால் ஆடு கீரையை சாப்பிட்டுவிடும் முதலில் ஆட்டை கொண்டு வந்து விட்டு பின்பு புலியைக் கொணர்வானானால் இங்கு விட்டு விட்டு போன பின்பு புலி ஆட்டை உணவாக்கிக் கொண்டுவிடும். இந்த இக்கட்டான சூழ் நிலையில் இப்பொருட்களை எப்படி அவன் தன் வீட்டுக்கு கொண்டு வந்து சேர்ப்பான்?

சரி தம்பி தங்கைகளே.

சரியான விடையை எழுதி அனுப்புங்கள். தெரியாதவர்கள் அடுத்த இதழில் விடையை கண்டு கொள்ளலாம்.

அதுவரை என்றென்றும் அன்புடன்

தாரகை அண்ணா

### சிறுவர் சிரிப்பு

ஆசிரியர்:- திருக்குறளை யார் இயற்றியது?
மாணவன்:- சத்தியமாக நான் இல்லை சேர்!
ஆசிரியர்:- அடேய் புத்தியற்றவனே - நாளை உன் அப்பாவைக் கூட்டிக் கொண்டு அதிபரின் காரியாலயத்திற்கு வா
(அதிபர் காரியத்தில்... .....)
அதிபர்:- மாணவன் என்ன தவறு செய்தான்?
ஆசிரியர்:- யார் திருக்குறள் எழுதியது என கேட்க அவன் தான் எழுதவில்லை என்றான்.
அதிபர்:- உனது மகன் இப்படிக் கூறினாரா?
தகப்பன்:- ஆம் சேர்! இவன் வீதிகளெல்லாம் பிரசுரம் எழுதுவான் அதுபோல் இதையும் இவன்தான் எழுதியிருக்கக் கூடும்!
அதிபரும் ஆசியரும்:- ?!?!?!!??

ஜோன் நிரோசன்
ஆண்டு 8 'A'
யாழ்ப்பாணக் கல்லூரி

## அவதாரம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதில் இவர்கள் ஈடுபட்டார்கள். இவர்கள் டியட்ரிக் பான்ஹேபர், ரூடால்ட் புல்த்மான், போல் தில்லிக் என்பவர்கள். இவர்களுள் முதன்மையானவர் பான்ஹேபர். இவர் கிறிஸ்துவைப்பற்றி, அவரது மனுவுருவேற்றல் பற்றிக் கூறும் போது, அவதாரமான இயேசு என்றும் அவதார நிலையிலேயே இருக்கிறார். கிறிஸ்து எப்பொழுதும் மனுவுருவேற்ற கிறிஸ்துவே என்று கூறினார்,

மனுவுருவேற்ற கிறிஸ்து மூன்று நிலைகளில் நம்மிடையே இருக்கிறார் என்கிறார் பான்ஹேபர். வார்த்தையாக நம்மிடையே இருக்கின்றார். அதாவது திருச்சபையின் நற்செய்தியில் - நற்செய்தியாக இருக்கின்றார். (2) திருச்சபையின் திருவருட் சாதனங்களில் இருக்கிறார். அதாவது அவரே திருவருட்சாதனமாக இருக்கிறார். (3) வார்த்தையாக, திருவருட் சாதனமாக இருக்கும் அவர் ஒரு குழுமாகவும் இருக்கிறார். அதாவது திருச்சபையாக இருக்கிறார். மேலும் இந்த கிறிஸ்து எங்கே இருக்கிறார் என்றால்? அவர் மனித வாழ்வு நிலையின் மையத்தில், வரலாற்றின் மையத்தில், இயற்கையின் மையத்தில் இருக்கிறார் என்கிறார் பான்ஹேபர்.

இந்த மூன்று கருத்துக்களையும் இணைத்து அவர் கூறும் பதம் - ''எனக்காக'' என்பதே. அவர் எனக்காக இருக்கிறார் என்பதே. He is Pre me (for me) இதன் அடிப்படையில் கிறிஸ்து யார் என்றால்? பிறர்காய் வாழ்ந்தவர். ''Jesus the Man for Others'' என்கிறார். ஆகவே கிறிஸ்துவாக ஊனுடலொருத்த கடவுள் இன்று மனித வாழ்வின் மையத்தில், எனக்காக, பிறருக்காக இருக்கிறார். அவரை காண்கின்றவர்களாக நாம் இன்று இருக்கவேண்டும்.

ஆகவே இன்று மனுவுருவேற்ற கிறிஸ்துவை நாம் கண்டுகொள்ளவும், அவரது மனுவுருவேற்பினை புரிந்துகொள்ளவும், கூடிய இடம் பாடுபடுகின்ற, துன்பப்படுகின்ற சமுதாயமே, அவர்களிலேயே, அவர்களுக்கூடாகவே கிறிஸ்துவைக் காண அழைக்கப் படுகிறோம். இன்று கிறிஸ்துவின் மனுவுருவேற்பு அல்லது வருகை அவர்களிலேயே அவர்களுக் கூடாகவே நடைபெறுகிறது. ஆக அந்த சமூதாயத்தின் பாடுகளில், துன்பங்களில், குருதி சிந்துதலில் பங்கேற்பதே கிறிஸ்துவில் அவரின் மனுவுருவேற்பில் பங்கேற்பதாகும். இதுவே இந்த கிறிஸ்மஸ் காலத்தில் நமக்குக் கொடுக்கப்படும் அழைப்பாகும்.

## இம்மானு...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு என்பதின் சின்னமாய் அடையாளமாய் இம்மானுவேலன் பிறக்கின்றார் என்பதை கூறுகின்றார்.

இன்று தமிழ் மக்களாகிய நாம் பாதுகாப்பு அற்றவர்களாயும் அடைக்கலம் இல்லாதவர்களாயும், ஏழ்மையில் உள்ளவர்களாயும், உள்ளவைகள் எல்லாவற்றையும் இழந்தவர்களாயும் எதிர்கால நம்பிக்கை அற்றவர்களாயும் இருக்கின்ற போது கிறிஸ்து நம்மோடு வாழ வந்துவிட்டார் என்ற விசுவாசத்தை புதுப்பிக்கும் நத்தார் தினமானது கிறிஸ்துவை நமது பாதுகாப்பாகவும் அவரை நமது அடைக்கலமாகவும் வந்து விட்டார் என்பதை ஏற்றுகொண்டு அவரில் சார்ந்து வாழ்ந்து அவரில் நமது எதிர்காலத்தை தீர்மானித்து கொள்வோம். இதுவே நத்தாரின் அறை கூவல்.

து. யோசுவாசிவஞானம்
கிறிஸ்தவ இறையியல் கல்லூரி

## வாதரவத்தை

வாதரவத்தை கிராமமானது ஒரு இந்துசமய நிழல் சிதறிய இடமாகவும், அதே நேரத்தில் வளர்ந்து வரும் ஒரு கிராமமுமாகும் இந்தக் கிராமத்தில் எமது தென் இந்திய திருச்சபையினரின் கவனம் திரும்பியது. இங்கு சென்று இந்த மக்களுக்கு வேதம் போதித்து மதம பரப்புவது நோக்கமல்ல மாறாக இப்படியான மக்கள் மத்தியில் 1816ம் ஆண்டு வந்த அமெரிக்க மிஷனரிமாரின் ஒத்த சிந்தனையின் தெறிப்பே. அதாவது கல்விபுகட்டி, கைத்தொழில் ஒன்றை பயிற்றுவித்து, கற்றும் கரைகாணாது, சுய வேலை வாய்ப்பின்றி அல்லற்படும் இளம் சமுதாயத்தினரை விழிப்புணர்வுக்கு கொண்டுவரும் நோக்கமாக இங்கு V T. C. தையற் பயிற்சி ஆங்கில வகுப்பு போன்றன அப்பொழுது ஊழியனாக பணி செய்த வண. தேவகரனின் மேற்பார்வையின் கீழ் செய்யப்பட்டது. பின்பு 05-01-95 கு. ஐ. குமரேசனின் கீழ் செயற்பட்டது. சிறப்பாக நடைபெற்ற காரியங்கள் முன்னேறிப் பாய்தல இராணுவ நடவடிக்கையின் மூலமாக தடைப்பட்டது அதில் இருந்து இன்றுவரை செயல் ஊக்கம் நடைபெறவில்லை. தற்போது 1-10-96ம் திகதியிலிருந்து மக்கள் அக்கிராமத்திற்கு செல்கின்றார்கள் அங்கு ஒருநிலையான நிலையத்தை ஆரம்பித்து மீண்டும் அங்கு பணியைத் தொடர்வதே அங்கு வாழ் மக்களதும் ஊழியனதும் விருப்பமாகும்


JAFFNA COLLEGE
CEYLON

WANTED
TEACHER TRAINEES

Teacher Trainees with Advanced Level qualifications to teach classes in the Primary Section,

Preference will be given for applicants who have knowledge in Western Music or in playing musical instru-ments.

Application should be Supported by two character certificates, of which one should be from the Principal of the school last studied and one from the Parish Priest,

Applications close on
06-01-1997

PRINCIPAL
Jaffna College.
Vaddukoddai.


இப்பத்திரிகை வட்டுக்கோட்டை ஆதீன காரியாலயத்தில் உள்ள அமெரிக்க இலங்கை மிஷன் அச்சகத்தில் உதயதாரகை முகாமையாளர், G. நடராஜாவினால் 1996 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.